## கரூர் சம்பவத்தில் சட்டரீதியாக ஓர் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்!

# ஒரு முதலமைச்சர் எப்படி செயல்படவேண்டும் என்பதில் நமது முதலமைச்சர் உயர்ந்து நிற்கிறார்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, அக். 2 - கரூரில், 41 உயிர்கள் பலியானதற்குச் சட்டரீதியாக ஓர் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைக் 'கொஞ்சமும் தயக்கமில்லாமல்' முதலமைச்சர் எடுக்க வேண்டும்! சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி பொய்களைப் பரப்புவது குடிநீரில் விஷத்தைக் கொட்டும் கொடூரமாகும்! அமைப்புகள், இயக்கங்கள், கட்சிகள், சமூக அக்கறை கொண்டோர் இளைஞர்களை சரியாக வழி நடத்துவதற்கான தங்கள் சமூகக் கடமைகளைச் செய்ய முன்வர வேண்டும் என்றும், ஒரு முதலமைச்சர் எப்படி செயல்படவேண்டும் என்பதில் நமது முதலமைச்சர் உயர்ந்து நிற்கிறார் என்றும் திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:

கரூரில் நடைபெற்ற த.வெ.க. தலைவர் நடிகர் விஜய்யின் பிரச்சாரத்தின் போது, அடங்காத கூட்டத்தின் விளைவாக நடந்த நெரிசலில் சிக்கி, 41 உயிர்கள் பலியாகிய சோகம் நம் அனைவர் நெஞ்சங்களில் இருந்தும் இன்னும் அகலவில்லை; ஒருபோதும் அகலாது. இதிலிருந்து கற்க வேண்டிய பாடங்கள் ஏராளம்.

ஆனால், அப் பாடத்தை உரியவர்கள் கற்கவில்லை என்பதுடன், அதற்கு மாறாக இன்னும் மோசமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தான் தற்போதைய வேதனைக்கும், வன்மையான கண்டனத்திற்கும் உரிய நிலவரம் ஆகும்.

புகழும், மக்களிடம் திரை அறிமுக ஈர்ப்புமே, மக்களைத் திரட்டும் ஆற்றலும் மட்டுமே அரசியல் கட்சியை நடத்துவதற்கும், ஒரு தலைவராவதற்குமான தகுதிகள் அல்ல; இக்கட்டான சூழல்களில் ஒருவர் எப்படி அதை எதிர்கொள்கிறார் என்பதை வைத்துத் தான் ஒருவருடைய தலைமைப் பண்புகளை மதிப்பிட முடியும்.

**வரலாற்றில் இதுவரை நடந்திராத பெருந்துயரம்**

தாங்கள் நடத்திய பிரச்சாரக் கூட்டத்தில், வரலாற்றில் இதுவரை நடந்திராத பெருந்துயரம் நடந்திருக்கும் சூழலில், அக் கட்சியிடமிருந்தோ, அதன் தலைவரிடமிருந்தோ, அல்லது அதன் முக்கியப் 'பதவி'களில் (அவர்களைப் பொறுப்பாளர்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்?) இருப்போரிடமிருந்தோ இதுவரை பொறுப்புமிக்க ஏதாவது ஓர் அறிக்கை வந்திருக்கிறதா?

செய்தியாளர்களைச் சந்திக்க மறுத்து த.வெ.க. தலைவர் நடிகர் விஜய், விமான நிலையத்திற்குள் புகுந்தவர், பத்திரமாக வீடு போய்ச் சேர்ந்ததும், நள்ளிரவுக்கு மேல் இரங்கல் செய்தி ஒன்றை வெளியிடுகிறார். அதன் பின் எந்தச் செய்தியும் இல்லை!

ஆனால், அதற்கு மாறாக இளைஞர்கள் பெரிதும் புழங்கும் சமூக ஊடகங்களில் திட்டமிட்டு நடந்திருப்பது என்ன?

**கைது செய்யப்பட்ட மூவரில் ஒருவர் பா.ஜ.க. வைச் சேர்ந்தவர்**

நடிகர் விஜய்யின் ரசிகர்கள் என்ற பெயரில் இன்ஸ்டாகிராம், 'எக்ஸ்' தளங்களில் இயங்கும் ஏராளமான நபர்களும், முகங்கள் அற்ற வெற்று அய்.டி.களும் (ID) பெரும் 'புரளிப் புயலை'யே உருவாக்கியிருக்கிறார்கள். (அதில் உண்மையான பெயர்களும் இருக்கலாம்; ஒருவரே பல கணக்குகளை வைத்திருக்கும் போலிக் கணக்குகளாக இருக்கலாம். இதுதான் வாய்ப்பு என்று தமிழ்நாட்டின் எதிர்க்கட்சிகளும் இதில் புகுந்து புரளிகளையும், பொய்ச் செய்திகளையும், அவதூறுகளையும் பரப்புவதையும் காணவே முடிகிறது. இதற்காக முதலில் கைது செய்யப்பட்ட மூவரில் ஒருவர் பா.ஜ.க. வைச் சேர்ந்தவர் என்பதே அதற்குத் தக்க சான்று ஆகும்.)

அவற்றில் சில காணொளிகளைக் கடந்த இரண்டு நாள்களிலும் காண நேர்ந்தது. எவ்வளவு பொய்ச் செய்திகள், அடிப்படையற்ற அவதூறுகள்! கொஞ்சமும் பொறுப்பற்ற, நேர்மையற்ற, புரிதலற்ற, வன்முறையைத் தூண்டும் வகையிலான, வக்கிர புத்தி கொண்ட பதிவுகள், பேச்சுகள், கமெண்டுகள் (கருத்துப் பகுதி) என்று குப்பை மேடாகக் காட்சியளிக்கின்றன சமூக ஊடகங்கள்.

பா.ஜ.க.வும், அ.தி.மு.க.வும் உள்ள கூட்டணியால், தி.மு.க.வை வீழ்த்த ஏற்பாடு செய்யப்பட்ட 'பி டீம்'தான் விஜய் என்கின்ற 'மாயமான்' என்பதை முழுமையாக வெகு விரைவில் நாடு அவர்களைப் புரிந்து கொள்ளும் வகையில், சமூக ஊடக அவதூறு அவர்கள் ஆதரவோடு நடத்தப்படும் 'அங்குரார்ப்பணம்' விளக்குகிறது.

வருத்தம் தெரிவித்தோ, பொறுப்பேற்றோ ஒற்றைச் செய்தி கூட அவர்களிடமிருந்து வரவில்லை!

நடந்த நிகழ்விற்கு அடிப்படையில் பொறுப்பேற்க வேண்டியவர்கள் யார்? அந்தக் கூட்டத்தை நடத்துவதற்கு அனுமதி கேட்டு, அதை ஒருங்கிணைத்தவர்கள் தானே! அக் கூட்டத்திற்கு ஆயிரக் கணக்கில் மக்கள் வர வேண்டும் என்று அழைப்பு விடுத்தவர்கள் தானே - அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டியவர்கள் - அவர்கள் தானே! இதுவரையிலும், நடந்த நிகழ்வுக்கு வருத்தம் தெரிவித்தோ, பொறுப்பேற்றோ ஒற்றைச் செய்தி கூட அவர்களிடமிருந்து வரவில்லையே!

அல்லது, அரசையோ, காவல்துறையையோ, யாரையோ குற்றம் சாட்டுவது என்று அவர்கள் முடிவெடுத்தாலும், அதையாவது நேர்மையாக, வெளிப்படையாக, அக் கட்சியின் தலைமையோ, கட்சியின் அதிகாரப் பூர்வ செய்தி வெளியீடோ செய்திருக்க வேண்டுமல்லவா?

கோர நிகழ்வு நடந்து நாம் இதை எழுதும் வரையிலான இந்த 60 மணி நேரம் வரை இது குறித்து அக் கட்சியின் அதிகாரப் பூர்வ செய்தி என்று ஒற்றை வரி கூட வெளிவரவேயில்லையே!

**நமது முதலமைச்சர் அவர்கள் பன்மடங்கு உயர்ந்து நிற்கிறார்**

ஒரு தலைவர் என்பவர் எப்படி இருக்க வேண்டும், ஓர் ஆட்சியாளர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இந்த ஒரு நிகழ்வின் மூலமே, நமது முதலமைச்சர் அவர்கள் பன்மடங்கு உயர்ந்து நிற்கிறார். அவரது பக்குவமும், அனுபவமும் எப்படிப்பட்டது என்பதை வியந்து பார்க்க வைக்கிறது. ஒரு முதலமைச்சர் எப்படிப் பணியாற்றவேண்டும் என்பது பொழுது விடிவதற்குள் உலகுக்கு நிரூபித்த ஒப்பற்ற முதலமைச்சர்மீது அவதூறு பரப்பி, புரியாத மக்களிடையே பொல்லாங்கு பரப்புவதா?

**கருத்துச் சுதந்திரம் அல்ல; வன்முறையைத் தூண்டுதல்!**

ஓரிடத்தில், ஒரு பொதுக் கூட்டத்தில், மாநாட்டில் தாங்கள் போற்றும் ஒரு நடிகரிடம் கூட அடங்காத ஒரு கூட்டத்தை, மக்களுக்குப் பேராபத்தை விளைவிக்கும் வகையிலும், அமைதியைச் சீர்குலைக்கும் வகையிலும், சட்டம் ஒழுங்கைச் சிதைக்கும் வகையிலும் திருப்பிவிட முயலும் பயங்கரவாதம் இது! மனித உயிர்கள் அவ்வளவு மலிவானதா?

உரிய சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க ஒரு போதும் தயங்கக் கூடாது! இதற்குப் பெயர் கருத்துச் சுதந்திரம் அல்ல; வன்முறையைத் தூண்டுதல்!

இந்த மிக முக்கியமான சூழலில் அ.இ.அ.தி.மு.க.வின் தலைமையும், பா.ஜ.க.வின் பதவி இழந்த தலைவர் ஒருவரும் பொறுப்பற்ற வகையில் பேசுவது கண்டிக்கத்தக்கது. அவதூறு பரப்புவதும், வன்முறையைத் தூண்டுவதும் கருத்துச் சுதந்திரம் அல்ல; அரசியல் உரிமை அல்ல. அதற்கெல்லாம் ஆதரவு தெரிவிக்கக் கூடாது.

கருத்துரிமை பரப்புரிமை என்பது சமூகநலன் பொது ஒழுக்கச் சிதைவுத் தளமாகிவிடக் கூடாது. கற்பனைக் கதைகளைப் பரபரப்புச் செய்திகளாக்கி, கோணல் புத்தியுடன் பரப்புவது, கரூர் நிகழ்வில் சதி என்றெல்லாம் பொய்யுரைகளை சமூக ஊடகங்களில் பரப்புவது, குடிநீரில் விஷத்தைக் கொட்டிக் கலப்பதற்கு ஒப்பாகும்.

பொய்த் தகவல்களைத் தருவதில் கூட இரண்டு ரகம் உண்டு.

1. Misinformation தெரியாமல் தவறுதலாகச் செய்வது.

2. Disinformation வேண்டுமென்றே அவதூறு பரப்புவது, திசைதிருப்பும் நோக்கத்தோடு பொய்யையும் புரட்டையும் பரப்புவது.

சில சமூக வலைதளங்களின் பின்னால் ஒளிந்து கொண்டு இரண்டாவது வகையில் திட்டமிட்டுப் பொய்ச் செய்திகளைப் பரப்புவதை எதிர்த்து, பொறுப்புமிக்க சமூக ஊடகச் செய்தியாளர்களும், கருத்தாளர்களும், அவ் ஊடகங்களை நடத்துவோரும் தங்கள் கடமையைச் செய்யவேண்டிய தருணம் இது!

**உடனடியாகத் தடுப்பது அவசரம் அவசியம்!**

விஷமச் செய்திகள், பொய் புனை சுருட்டுகள் தயாரிக்கும் கூடமாகச் செயல்படும் சமூக ஊடகங்கள் மீது தமிழ்நாடு அரசின் கடும் நடவடிக்கை பாய வேண்டும். புரியாத அப்பாவிகளைக் குழப்பும் செயல்களை உடனடியாகத் தடுப்பது அவசரம் அவசியம்!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இவ் விவகாரத்தில் மிகக் கவனமாக, சரியான தொடர் நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்கள். சட்டரீதியாக ஓர் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைக் ''கொஞ்சமும் தயக்கமில்லாமல்'' முதலமைச்சர் எடுக்க வேண்டும் என்று அவரைக் கேட்டுக் கொள்வதுடன், இந்தச் சூழலில் (இனியேனும்) ஊடகங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும், மற்ற அமைப்புகளும், இயக்கங்களும், கட்சிகளும், சமூக அக்கறை கொண்டோரும் அந்த இளைஞர்களை சரியாக வழிநடத்துவதற்கான தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும்; அரசுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

தலைமைக்குத் தன்னை பக்குவப்படுத்திக் கொள்ளத் தெரியாதவர்களிடம், வெறும் சினிமாக் கவர்ச்சியையும், தன்னிடம் உள்ள பண பலத்தையும் தூண்டிலாக வைத்து, அரசியல் அனுபவமற்ற ஒருவரின் பரிதாப அரசியல் படலம் இது! இது, நாட்டை எங்கே கொண்டுபோய் விடுமோ என்று தெரியவில்லை.

தொண்டர்களைக் கட்டுப்படுத்த வக்கற்றவர்கள் வாய் வீச்சு, எழுதிக் கொடுத்த வசனங்களால் அவர்கள் இதுபோன்ற பரிதாப நிலைக்குத்தான் தள்ளப்படுவார்கள்!

பாடுபட்டு உழைக்கும் மக்கள் சிந்திப்பார்களாக!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தி சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்க (கோவை மண்டலம்) நிர்வாகிகள்

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தி சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (கோவை மண்டலம்) (பதிவு எண். 444/CBE, பேரவை இணைப்பு எண். 329) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 29.09.2025 அன்று மதுரை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் **திரு. சி.கருணாநிதி** அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் மத்திய சங்க நிர்வாகிகளாக வெற்றி பெற்றுள்ளனர்.

**மத்திய சங்க நிர்வாகிகள்**

| | | |
|---|---|---|
| தலைவர் | – | M. ரங்கநாதன் (பணி எண் **C21763**) |
| துணைத் தலைவர்கள் | – | 1) A.S. அண்ணாதுரை (பணி எண் **E01286**) |
| | | 2) D. சுரேஷ் தியாப்ளஷ் (பணி எண் **014624**) |
| | | 3) M. ஸ்ரீரங்கப் பெருமாள் (பணி எண் **024538**) |
| | | 4) E. கனகவேல் (பணி எண் **C21027**) |
| | | 5) N. ரங்கநாதன் (பணி எண் **C24107**) |
| பொதுச்செயலாளர் | – | P. துரைசாமி (பணி எண் **018139**) |
| செயலாளர்கள் | – | 1) K. மோகன்குமார் (பணி எண் **015733**) |
| | | 2) P.S. ஜீவானந்தம் (பணி எண் **017886**) |
| | | 3) G. வெங்கடாசலபதி (பணி எண் **017623**) |
| | | 4) P. குணசேகரன் (பணி எண் **015892**) |
| | | 5) K. ரவீந்திரன் (பணி எண் **017923**) |
| பொருளாளர் | – | R. செல்லப்பன் (பணி எண் **018265**) |

இடம்: கலைஞரகம்
நாள்: 01.10.2025

**மு.சண்முகம், Ex.MP**
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை



தேனி வடக்கு மாவட்டம் தேனியில் செயற்குழு கூட்டம் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. நிதி மற்றும் மனித வள மேம்பாட்டு அமைச்சர் – மண்டலப் பொறுப்பாளர் தங்கம் தென்னரசு சிறப்புரை ஆற்றினார். சரவணகுமார் எம்.எல்.ஏ., போடி தொகுதி பார்வையாளர் நேரு பாண்டியன், பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முன்னாள் எம்.எல்.ஏ., முத்துராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் பி.டி.செல்லப்பாண்டியன், தேனி வடக்கு நகரச் செயலாளர் பாலமுருகன் நன்றி உரை யாற்றினார். மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய செயலாளர்கள், நகரச் செயலாளர், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## நெல்லை மேற்கு மாவட்டம்

# தலைவர்கள் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!



நெல்லை, அக். 2 - நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தலைவர்கள் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நாளை (03.10.2025 - வெள்ளிக்கிழமை) நடைபெறுகிறது. என நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அன்புத்தளபதியார் அவர்களின் நல் வாழ்த்துகளோடு நெல்லை மேற்கு மாவட்ட கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள எனது (இரா. ஆவுடையப்பன்) தலைமையில் நாளை (03.10.2025 வெள்ளிக்கிழமை) ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தலைவர்களின் சிலைகளுக்குக் கீழ்க்கண்ட விவரப்படியான மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

அதன்படி நாளை (03.10.2025) காலை 09.30 மணிக்கு ஆழ்வார்குறிச்சி அண்ணா சிலை, 10.00 மணிக்கு கடையம் பேருந்து நிலையம் அருகில் டாக்டர்.அம்பேத்கர், இம்மானுவேல் சேகரனார் திருவுருவப் படங்கள், 11.00 மணிக்கு கீழப்பாவூரில் பெரியார் சிலை, காமராஜர் சிலை, 11.30 மணிக்கு கழுநீர்குளம் பசும்பொன் முத்துராமலிங்கதேவர் சிலை, 12.00 மணிக்கு ஆலங்குளம் காமராஜர் சிலை, 12.30 மணிக்கு முக்கூடல் காந்தி சிலை ஆகிய தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிகளுக்கு மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் முன்னிலை வகிக்கின்றனர். நிகழ்வில் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் வருகை தந்து நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்திட கேட்டுக் கொள்கன்றேன்.

இவ்வாறு இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.



தேனி தெற்கு மாவட்டம் சார்பாக ஆண்டிபட்டியில் செயற்குழு கூட்டம் தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் வரவேற்பு உரையாற்றினார். மகாராஜன் எம்.எல்.ஏ. மாநில தேர்தல் பணி குழு செயலாளர் செல்வேந்திரன். தீர்மானக் குழு இணைச் செயலாளர் ஜெயக்குமார், மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் பாண்டியன், தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் ஆசையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிதி மற்றும் மனித வள மேம்பாட்டு அமைச்சர் மண்டலப் பொறுப்பாளர் தங்கம் தென்னரசு சிறப்புரையாற்றினார். கம்பம் தொகுதி பார்வையாளர் ஜெயன் மாவட்ட துணை செயலாளர்கள் செந்தில் ஈஸ்வரி பிச்சை மலைச்சாமி, பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சூலூர் எஸ்.எஸ்.பொன்முடி

### அக்டோபர் 2 (2012)



மாவட்டக் கழக துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றியக் கழகச் செயலாளர் என்ற பொறுப்புகளை வகித்து, சூலூர் பகுதியில் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

சூலூர் பேரூராட்சித் தலைவர், நிலவள வங்கித் தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர், பல்லடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக மக்கள் பணியாற்றியவர்.

1986ஆம் ஆண்டு முதல் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.கே.எஸ்.வாசன்

### அக்டோபர் 3 (2013)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

கும்பகோணம் நகரத்தில் வார்டு கிளைச் செயலாளர், நகர அவைத்தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

குடந்தை நகர வீடு கட்டும் சங்கத்தில் துணைத்தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**